## இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு - 2020

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றவாறு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு,எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். ஆணைக்குழுவைக் கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினரதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம்,ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பன எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலொன்றாக இருப்பினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளலும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். தவறினால் ஏற்படும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் போதியளவு தவறான கூற்றுக்களை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பிரபலமானதாகும். தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாகலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும்உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும்மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக மன்றம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது

அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

இயலுமானவரை மற்றும் தேவையான எச் சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு பரப்பெல்லையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்குமிடத்து,ஆணைக்குழுவின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு அதன் ஒழுங்கமைப்பு,முறைமை, நடைமுறைகள்,ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமை, நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகப்பேணப்பட்டுள்ளனவா என்றும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாட்டிற்கு இணங்க ஆணைக்குழு செயற்பட்டுள்ளதா என்றும்,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றும்,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் கால வரம்பிற்குள்ளும் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும்,

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் 30 ஆம் பந்தியி மற்றும் 39 ஆம் பந்தியின் படி முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துகள் அதாவது, பூஜ்ஜிய கொண்டு செல்லும் பெறுமதியுடைய சொத்துகள் அதைத் தாண்டிப் பயன்படுத்தினால், சொத்துகளின் ஆயுட்காலம் நியாயமான முறையில் மதிப்பிடப்பட்டு, சொத்துக்களின் ஆயுட்காலத்தை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனினும், நிறுவனத்திற்குச் சொந்தமான ரூபா 24,133,445 பெறுமதியான சொத்துக்கள் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | அவதானிப்பை ஏற்றுக்கொள்கிறேன். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நடப்பாண்டுக்குரிய மீண்டெழும் செலவினங்களுக்காக திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொகை ரூபா 40,600,000 ஆன போதிலும், மீண்டெழும் செலவினத்தினுள் மீண்டெழும் செலவினமாக செலவிடப்பட்டுள்ள தொகை ரூபா 42,584,746 என்பது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லையினை விஞ்சி ரூபா 1,984,746 தொகை மீண்டெழும் செலவினங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது. | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கின்றேன். | திறைசேரியின் அங்கீகாரமின்றி திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சலாகாது. |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | இலக்கம் 372 இன் பிரகாரம், உப கட்டுநிதிகள் தொடர்ச்சியாக நிறுவனத்தின் தலைவர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் பரிசோதிக்கப்பட வேண்டிய போதிலும், ஆணைக்குழுவின் முற்பணப் பதிவேடு அவ்வாறு பரிசோதிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டிராததுடன், பதிவேடுகளும் உரிய முறையில் பேணப்பட்டிருக்கவில்லை. | தவறுதலொன்று இடம்பெற்றுள்ளதை ஏற்றுக்கொள்கின்றேன். அவ்வாறான தவறுகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டினது செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 1,025,898 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை 4,589,666 ஆக இருந்தது. அதற்கமைய, நிதி விளைவுகளில் ரூபா 3,563,768 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. கடந்த வருடத்திற்கு ஒப்பாக நிர்வாகச் செலவினம் குறைவடைந்தமை இந்த அதிகரிப்றிகு பிரதானமான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கையில் புத்தாக்க கலாச்சாரத்தை ஊக்குவித்தல் மற்றும் ஸ்தாபிப்பதற்கான ஊடகக் கொள்கையை உருவாக்குவது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த செய்தியாளர் சந்திப்பை நடத்துதல் மற்றும் ஊடகக் கொள்கையை உருவாக்குதல் ஆகியவற்றுக்காக 2017ஆம் ஆண்டு ரூபா 1,680,000 செலவிடப்பட்டதாகவும், இதனை திறம்பட பயன்படுத்த முடியாது எனவும் புத்தாக்குநர் ஆணைக்குழுவின் ஆணையாளர் தெரிவித்திருந்தார். இதனால், மேற்கண்ட நிதிச் செலவுகளை பொறுப்பான அதிகாரிகளிடம் இருந்து வசூலிக்கவோ அல்லது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது தொடர்பிலோ கவனம் செலுத்தப்படவில்லை. | இலங்கையில் புத்தாக்க கலாச்சாரத்தை ஊக்குவித்தல் மற்றும் ஸ்தாபிப்பதற்கான ஊடகக் கொள்கையை உருவாக்குவது பற்றிய 2019 பிப்ரவரி 20 மற்றும் 2019 மே 08 அன்று நடைபெற்ற பொது முயற்சிகள் மீதான குழுக்களில் விவாதிக்கப்பட்டது. மேலும், இந்த ஊடகக் கொள்கையை உருவாக்குவது மற்றொரு நிறுவனத்தால் செய்யப்பட்டது என்பதால் இந்த நிறுவனத்தால் வகுக்கப்பட்ட ஊடகக் கொள்கையை நடைமுறையில் திறம்பட பயன்படுத்த முடியாது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். | செலவினம் மேற்கொள்வதற்கு முன்னர் தேவை மற்றும் உற்பத்தித்திறன்குறித்து ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், பொறுப்பற்ற முறையில் செயல்படும் அதிகாரிகளிடம் இருந்து செலவழித்த பணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பத்து ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக புத்தாக்குநர்களுக்கு வழங்கப்பட்ட கடனை மீள அறவிட போதிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுடன், | 2013 ஆம் ஆண்டு முதல் அவ்வப்போது கட்டுப்பாட்டு சபையின் ஒப்புதலுடன் அமைச்சிலிருந்து பதிவழிக்கப்பட | கடன்களை அறவிடுவதற்காக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 9,802,964 ஆன கடன் மீதிக்கு நூறு சதவீதம் ஐயக்கடன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வேண்டும் என்று கோரியிருந்த மற்றும் பொது முயற்சிகள் தொடர்பான குழுவில் விவாதிக்கப்பட்டுள்ள 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடன்களை அமைச்சின் பரிந்துரைகளின்படி பதிவழிப்பதற்காக கிராம உத்தியோகத்தர் அறிக்கைகளைப் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளரின் ஊடாக கிராம உத்தியோகத்தர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி, இதுவரை 08 கிராம உத்தியோகத்தர் அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.<br><br>இந்தக் கடனை பதிவழிக்க அமைச்சின் மூலம் பொது திறைசேரிக்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுத்து வரப்படுவதுடன், ஆணைக்குழுவினால் தற்போது வழங்கப்படும் கடன்கள் தொடர்பில் முறையான நடைமுறையொன்று வகுக்கப்பட்டுள்ளது. | |

### 3.3 நிதியங்களின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கையில் புத்தாக்குநர்களுக்கு அவர்களின் தயாரிப்புகளை சந்தைக்கு கொண்டு வரவும், ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்காகவும் ஒரு பொறிமுறையை உருவாக்குவதற்கு 2017 ஆம் ஆண்டில் ரூபா 05 மில்லியன் ஒதுக்கீட்டில் நிறுவப்பட்ட புத்தாக்கங்களை விரைவுபடுத்தும் பொறிமுறை | பொது முயற்சிகளுக்காக குழுவின் கவனத்திற்கு உட்பட்டமையின் அடிப்படையில் ஆணைக்குழுவினால் கடன் வழங்கும் முறைமை உருவாக்கப்பட்டது. அதற்காக 2019 ஏப்ரல் 29 ஆம் தேதி கட்டுப்பாட்டுக் | முறையான திட்டங்களைத் தயாரித்து, அவை வழங்கப்பட்ட நோக்கத்திற்காக தொடர்புடைய நிதியைப் பயன்படுத்தல். |

நிதியத்தில் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி ரூபா 46,472,155 ஆக காணப்பட்டதுடன், அதில் ரூபா 10 மில்லியன் புத்தாக்குநர் நிதியத்திற்கு மாற்றப்பட்டமை தவிர வேறு எந்த பணியும் மீளாய்வாண்டில் செய்யப்படவில்லை.

குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. 2019 இல் பெறப்பட்ட விண்ணப்பங்களை மதிப்பீடு செய்ய முடியாமைக்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களை நியமிக்கத் தேவையான பரிந்துரைகளில் தாமதம் மற்றும் ஆணைக்குழுவிற்கு நிரந்தர ஆணையாளர் இல்லாதிருந்தமை ஆகிய காரணங்களா அமைந்திருந்தன.

கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக 2020 ஆகஸ்ட் வரை அலுவலகத்தின் பணிகள் நிறுத்தப்பட்டமை, மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களைப் வரவழைப்பதில் உள்ள சிரமங்கள், நிறுவன கோப்புகளை அணுக இயலாமை போன்ற காரணிகளால் 2020 இல் சுமார் 3 காலாண்டுகள் தாமதம் ஏற்பட்டது.

2020 ஆகஸ்ட் 26 ஆந் திகதி நடைபெற்ற முதல் மதிப்பீட்டின் படி, 2020.12.07 அன்று நடத்தப்பட்ட மதிப்பீடுகளும், மற்றும் 2020.12.22 அன்று மெய்நிகர் முறையில் நடைபெற்ற நிதிக் குழுக்களின் மதிப்பீடுகளின் பிரகாரம், மூன்று புதிய கண்டுபிடிப்புகளுக்கான வணிக முன்மொழிவுகளுக்காக ரூபா 18 மில்லியன் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தற்போது IAFMSL செயற்திட்டத்திற்கான கடன் வழங்கும் முறைமை உருவாக்கப்பட்டுள்ளது.

### 3.4 வேறு அமைப்புக்களின் வளங்களை பயன்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திறன்கள் அபிவிருத்தி, தொழில்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சினால் 2020 செப்தம்பர் 17 ஆந் திகதிய 253-2750 ஆம் இலக்க வேன் வண்டிய ஆணைக்குழுவிற்கு தற்காலிகமாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பில் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகளில் இது தொடர்பில் வெளிப்படுத்துவதற்க நடவடிக்கை எடுக்கப்படும் என தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். | சொத்துக்களை கணக்குகளில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆந் திகதி பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 12 இன் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு நிறைவடைந்து 150 நாட்களுக்கு பின்னர் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 2017,2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் 2021 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2017-2019 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் அச்சிடப்பட்டுள்ளதுடன், அவற்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், 2019.05.03, 2020.07.16, 2020.09.07 மற்றும் 2021.01.26 ஆந் திகதிய கடிதங்களின் ஊடாக அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது. | அறிக்கைகள் துரிதமாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு நடவடிக்கைகளை உள்ளடக்குவதற்கு முன்மொழியப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் போது ஆணைக்குழுவின் கடமைகள் | ஆணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வுப் பணிகள், வரிசை அமைச்சின் உள்ளக கணக்காய்வாளரின் மேற்பார்வையின் கீழ் பொது நிதிச் சுற்றறிக்கை | ஆண்டுதோறும் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |

தொடர்பில் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

01/2016 மற்றும் துணைச் சுற்றறிக்கையின் விதிகளுக்கு இணங்க, நிறைவேற்றுவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டது. இதன்படி, ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வுகளை வரிசை அமைச்சின் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளுமாறு ஆணைக்குழுவினால் எழுத்துப்பூர்வமாக கோரிக்கை விடுத்துள்ளது. எவ்வாறாயினும், இது தொடர்பாக அமைச்சிடம் இருந்து எழுத்துப்பூர்வ பதில் கிடைத்திருக்கவில்லை என்றாலும், 2020.07.13 அன்று நடைபெற்ற ஆணைக்குழுவின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் தலைமை உள்ளகக் கணக்காய்வாளரால் அவ்வாறு செய்ய ஒப்புக்கொள்ளப்பட்டது.